# பாம்பன் தீவும், என் காதலும்

## (பாம்பன் / ராமேஸ்வரம் / தனுஷ்கோடி)




நண்பனின் திருமண விழாவில் தனிமையில் எழுதிய சில வரிகள் உங்கள் பார்வைக்கு. பாம்பன் தீவு இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் அமைத்துள்ள ஒரு தீவு. இத்தீவு தமிழ்நாட்டில் உள்ள ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது. பாம்பன் தீவில் உள்ள அழகிய ராமேஸ்வரம் நகரத்தை பற்றி இப்போது ஒரு சிறு வரிகள் பார்ப்போம்.

அழகிய தீவு நகரம், உப்பு காத்து, கோவில் மணியோசை, மீன் வாசம், படகுகளின் இசை, சுடும் வெயில் இவை அனைத்தையும் கொண்ட உன்னை ரசிக்கும் உன் காதலனாக நான். ஒவ்வொரு முறை உன்னை பார்க்கும்போதும் முதல் முறை பார்ப்பதுபோல் ஏனோ ஒரு காதலும், வியப்பும்.

என் இளமை இருக்கும் போதே உன் அழகை ரசித்து என் கேமராவில் உன் நினைவுகளை பதிவு கொள்ள வேண்டும் என்று ஒரு பேராசை. ஆயிரம் பேர் உன்னை அழகாக காட்டினாலும் உன் அழகை என் விழிகளில் பேரழகாக காட்ட வேண்டும் என்ற பேராசை ஓர் காதலனாக என்னுள் எப்போது உள்ளது, முடிந்த வரை அதை எப்போது என் நினைவில் கொள்வேன். சிலரது கேள்வி அங்கு அப்படி என்னதான் உள்ளது, எப்போதும் ராமேஸ்வரம் புராணமும், புகைப்படம் தான?

ஆம், ஏனோ தெரியவில்லை உலகில் எத்தனை அழகான இடங்கள் இருந்தாலும் அங்கு மட்டும் ஏதோ ஓர் உயிர் உள்ளது போல் என்னுள் ஓர் உணர்வு , ஒரு காதலனாக அதை நான் நன்கு அறிவேன். என் சொந்த ஊரான மதுரைக்கு பின் என் மனதுக்கு மிகவும் பிடித்த இடமும், அதற்கும் மேல் என் புகைப்பட பயணம் தொடங்கிய இடமும் ராமேஸ்வரம் தான். இது போதாதா அவளை நான் புராணம் பாட.




அது மட்டும் அல்ல சில செய்திகள், மீனவர்களின் வாழ்க்கை, பல வரலாற்று நிகழ்வுகளை படிக்கும் பொழுது ராமேஸ்வரத்தில் மேல் அன்பும், மரியாதையும் என்னுள் கூடியது. குறிப்பாக அப்துல் காலம் அய்யாவின் இளமை பருவம், மீனவர்களின் போராட்டம், 1964 ஆம் ஆண்டு தனுஷ்கோடி புயல், நல்ல தண்ணீருக்கு மக்கள் படும் பாடு, அயல் நாட்டு பறவைகளின் வருகை மற்றும் இலங்கைக்கும், தமிழகத்துக்கும் உள்ள உறவு என்று இவைகளை போன்ற பல உள்ளது.

இவை அனைத்தும் ஒருபக்கம் இருந்தாலும் இதற்கும் மேல் பல அழகிய இடங்கள், பல வண்ணங்கள் கொண்ட படகுகள், நிலமும் பச்சையும் கொண்ட கடல் நீர், அழகிய சூரிய உதயம், கோவில்கள், சுவையான மீன் உணவு மற்றும் இளையராஜா பாடல்கள் போல் மெல்லிய கடல் அலைகள் என்று பல உள்ளது, இவைகளே அவள் மேல் நான் காதல் கொண்டதற்கு காரணம்.

காசிக்கு அடுத்தப்படியாக ராமேஸ்வரம் ஹிந்துக்களின் ஓர் புண்ணிய ஸ்தலமாக விளங்குகிறது. மதுரையில் இருந்து சுமார் 172 km. சென்னை, திருச்சி போன்ற தமிழகத்தில் பல முக்கிய இடத்தில் இருந்து பஸ் போக்குவரத்து மற்றும் ரயில் சேவைகளும், அருகில் மதுரை மற்றும் தூத்துக்குடி விமான நிலையமும் உள்ளது.




தங்குவதற்கு பாதுகாப்பான விடுதிகள் மற்றும் சுற்றுலா தளங்களை காண வாடகை வாகனங்களும் அங்கு உள்ளது. கண்டிப்பாக வாழ்நாளில் அனைவரும் காணவேண்டிய ஓர் அழகிய இடம், முடிந்தால் கண்டிப்பாக இப்பதிவை வாசிக்கும் நண்பர்கள் ஓர் முறை சென்று வாருங்கள் மீண்டும் செல்விர்கள். இன்னும் வரும் நாட்களில் பாம்பன், ராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடியை பற்றிய என் அனுபவங்கள் மற்றும் சுவாரஸ்யம் நிறைந்த செய்திகளை பற்றி பார்ப்போம் என்ற நம்பிக்கையில் என் பயணமும், புகைப்படமும், காதலும் தொடரும்.

**எழுத்தும், எண்ணமும், புகைப்படமும்**

**- கோபிநாத் முருகேசன்**